தென் இந்தியா.

(10 — 11)

அக் — நவம்பர், 1931

JL
4310๑2,N26
N31.6.10-11
199407.

1264

Regd. No M. 2475.

OCT.-NOV., 1931.
Vol. VI—No. 10-11




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ் : மைலாப்பூர் : மதராஸ்.

7 DEC

பொருளடக்கம்.



| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 1. | சேப்பங்கிழங்கு | 141 |
| 2. | வெந்தயம் | 143 |
| 3. | வெந்தய லேகியம் புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஓர் சிறந்த ஔழதம் | 144 |
| 4. | கிராம உபாத்தியாயர் விஷயம் | 145 |
| 5. | கோயமுத்தூர் ஜில்லாவில் பல்லிமடை கிராம ஜனங்களின் பாரெஸ்டு சம்பந்தமான குறைகள் | 149 |



வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிட்டர் & மானேஜர்.
எ. சுவாமிநாதய்யர், பி. ஏ.

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்).

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒரு சேர் ரூ. 3 0 0

சுக்ல ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ. 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகால மாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.


# ரூரல் இந்தியா


(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

ஆனரரி எடிடர், மானேஜர்:—

எ. ஸ்வாமிநாதய்யர், B. A. ரிடயர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ் : மைலாபூர் : மதராஸ் :

வால்யூம் VI. 1931ஹ அக்டோபர்—நவம்பர்மீ நெ. 10-11


## சேப்பங் கிழங்கு.

இந்தக்கிழங்கு எல்லா உஷ்ணதேசங்களிலும், மிதஉஷ்ண தேசங்களிலும் பயிரிடப்படுகின்றது. சேப்பங்கிழங்கு மிகவும் ருசியுள்ளது. வெஸ்டு இண்டீஸ் முதலிய நாடுகளில் இக்கிழங்கில் சிலஜாதிகள் ஒரு எகராவுக்கு ஆறுடன்களுக்கு குறையாமல் மாசூல்களைக் கொடுக்கின்றன. ஹவாய்த்தீவில் சில ஜாதிகள் ஒரு எகராவுக்கு 18 டன்கள் அல்லது 36 வண்டி மாசூலைக்கொடுக்கின்றன. ஹவாய்த்தீவிலேயே ஒருவித ஊதா நிறமுள்ள கிழங்கு உற்பத்தியாகிறதாம். அந்த ஜாதிக்கிழங்கு அரசர்களின் உபயோகத்திற்காக மாத்திரம் முற்காலத்தில் பயிர் செய்யப்பட்டதாம். அது எகராவிற்கு ½ டன்னிலிருந்து ஒருடன் வரையில் விளையுமாம்.

சேப்பங்கிழங்கில் 100 பவுண்டு எடையில் சுமார் 15 பவுண்டு ஸ்டார்ச்சு என்னும் மாவுகிடைக்கிறது. இது ஆரோரூட்மாவைப்போல் சன்னமாகவும் வழவழப்பாகவுமிருக்கும்.

சேப்பங்கீரையைக் கொஞ்சம் இளசாயிருக்கும் போது உலகெங்கும் பலவிதக்கறிகளாகச் செய்து உண்கிறார்கள்.

சேப்பங்கிழங்கானது அதிக இலாபத்தைக்கொடுக்கிற எளிதில் விளைகிற பயிர். மாசூலும் மேற்கூறியபடி தானியப்பயிர்களைக் காட்டிலும் பதின்மடங்குக்கு மேல் உண்டாகும். ஆகையால், இப்பயிரை எல்லா கிராமங்களிலும் ஜனங்கள் கொஞ்சமட்டுமாகிலும் நஞ்சை நிலங்களில் பயிரிடவேண்டும்.

சேப்பங்கிழங்கு நிறம்ப உஷ்ணமான நாடுகளிலும் விளையும். மழையும் இதற்கு நல்லது. ஆகவேதான், இது மலையாளத்திலும் வங்காளத்திலும், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் நன்ருய் விளைகிறது. மழை குறைவாக அதிக உஷ்ணநாடுகளில் கூட, இதற்கு வேண்டிய நீர்பாய்ச்சப் பட்டால், அதிகக்கிழங்கு உற்பத்தியாகிறது. அதிக அழுத்தமான களிமண் நிலத்தில் இது வேர்பாவிக் கிழங்கு விடுகிறதில்லை. மணல் அதிகமான நிலங்களிலும் நன்ருய் விளைகிறதில்லை. மணல்ப்பாங்கான களிமண் கலந்த செழிப்பான நிலமே இதற்கு மிகவும் ஏற்றது.

சேப்பங்கிழங்கை நிலத்தில் விரைபோல் புதைத்துப்பயிர் செய்ய வேண்டும். நம்முடைய தேசத்தில் நடுத்திறமான உருவுள்ள முழுகிழங்குகளை நடுகிருர்கள். ஆனல் வெஸ்டு இண்டீஸ் முதலிய இடங்களிலோ கிழங்குகளை வெட்டியெடுக்கும்பொழுது மேலேயுள்ள, செடியின் வேரோடு ஒட்டிக்கொண்டிருக்கும் தாய்க்கிழங்கை சுமார் பாதிக்குமேல் விட்டுவிட்டு மேலேயிருக்கும் பாதியை மேல்ச்செடியுடன் வெட்டியெடுத்து நடுகிருர்கள். நடும்பொழுது அடியில் சுமார் ஆறு அங்குலம் இலையையும் குருத்தையும் விட்டுவிட்டு மற்ற மேல்பாக இலையையும் தண்டையும், வாழைக்கன்றின் மேல்பாகத்தை அறுத்தெறிவதுபோல் அறுத்தெறிந்து விடுகிருர்கள். இப்படி இலையுடன் எடுக்கப்பட்ட கிழங்கு விரை, பத்து பதினைந்து நாட்களின் பின்பு நடப்பட்டால்கூட நன்ருய் வளருமாம். அதிக எடையுள்ள நல்ல கிழங்குகளும் உண்டாகும். நம்முடைய தேசத்திலும் ஜனங்கள் இம்முறையை யநுஸரித்துப்பார்க்க வேண்டும். இதை நடுவதற்குமுன் நிலத்திற்கு எருப்போட்டு, நிலத்தை சுமார் 9 அங்குல ஆழம் வரையில் உழுது புழுதியாக்க வேண்டும். இம்மாதிரி புழுதி செய்தபின் நிலத்தில் வரிசை வரிசையாக மூன்று நான்கடி தூரத்திற்கு ஒன்று வீதம் உழவுசால்கள் செய்யப்பட வேண்டும். இச்சால்களில் மேற்கூறிய கிழங்குச் செடிகளை மூன்று நான்கடி தூரத்திற்கு ஒன்ருக நிலத்தில் அடிக்கிழங்கைப் புதைத்து நடவேண்டும். அதிக உஷ்ணமான கோடை காலங்களில்தவிர மற்ற எல்லாக் காலங்களிலும் இவைகள் நடப்படலாம். நட்டபிறகு வாரத்திற்கொருவிசை அல்லது இரண்டுவிசை நீர்ப்பாய்ச்ச வேண்டும். இரண்டு மூன்று தரமாகிலும் கொத்திக் களை எடுக்க வேண்டும். வெஸ்டு இண்டீஸ் ஜாதிகள் கிழங்கிட 9 மாதங்கள் செல்லுமாம். கிழங்கு முற்றியபொழுது ஒரே காலத்தில் மாகுல்களை வெட்டி எடுக்க வேண்டுமென்பதில்லையாம். நிலத்திலேயே அவைகள் இரண்டு மூன்று மாதங்கள் வரையில் இருக்கலாமாம். கிராக்கிக்குத் [illegible] த்து விற்கலாம்.

199407



# வெந்தயம்.

வெந்தயமும், அதன் கீரையும் சஞ்சீவிகளென்று மேநாட்டு உணவாராயச்சி நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள். அவைகளைக் காட்லிவர் ஆயிலுக்குச்சமானமான உணவுப் பொருள்களென்று கண்டு பிடித்திருக்கிருர்கள். ஆல்கலாய்டு சத்துக்களும், பாஸ்பரஸ் உப்புக்களும், லெசிதினும், நூக்ளியோ ஆல்மனும் அவைகளில், காட்லிவர் ஆயிலில் இருப்பது போல் இருக்கின்றனவாம். இரத்தத்தை உண்டாக்க வேண்டிய பொருளாகிய இரும்பும் அவைகளில் அதிகமாக விருக்கிறது. வெந்தயத்தில் 100இல் 6 பங்கு கசப்பு எண்ணெயும், 28 பங்கு 'மியூஸிலாஜ்' என்கிற பிசின் போன்ற வஸ்துவும், 22 பங்கு ஆல்புமனும் இருக்கின்றனவாம். 100 பலம் முழு வெந்தியத்தை யெறித்தால் 7 பலம் சாம்பல் தேரும். இவ்வேழு பலம் சாம்பலில் $1\frac{3}{4}$ பலம் பாஸ்பரஸும், மீதிக்கு கால்ஷியமும் இருக்கின்றன.

வெந்தியமானது டிராப்ஸி என்று உடம்பு வீக்க நோய்க்கும், சீதபேதி, வயிற்று வலி இருமல் முதலிய நோய்களுக்கும் நல்ல ஔழதம் வெந்தயம் பசியை யுண்டாக்கி உணவை ஜெரிக்கச் செய்யும், மூளையையும், நரம்புகளையும் பலப்படுத்தும், மூத்திரக்கட்டை நீக்கும்

வெந்தயத்தை வருத்து காபி செய்து குடிக்கலாம். இது தேகத்திற்கும் புஷ்டியைக் கொடுத்து உஷ்ணத்தைப் போக்கும். வெந்தய விரை ஒரு பலமும், வறுத்த முழுக்கோதுமை ஒரு பலமும் சேர்த்துப் பொடி செய்து, காபி செய்து பால் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளலாம். வெந்தயத்தை அரைத்து ஆரோரூட் முதலியவைகளுடன் கலந்து கஞ்சி செய்து உட்கொண்டால் ஸ்திரீகளுக்கு முலைப்பால் அதிகரிக்கும் மதுமேகம் (Diabetes), யானைக்கால் கண்டமாலை, இரத்தக் குறைவு, மூளை நரம்புகள் முதலியவைகளின் பலஈனம் முதலிய நேய்களுக்கு பிரதிதினமும் ஒரு வேளை கால் பலம் வெந்தயத்தைப் பொடி செய்து கஞ்சி காய்ச்சி பாலுடன் கலந்து உட்கொள்ளலாம். வெந்தயத்தை அரைத்துத் தலையில் தேய்த்துக் கொண்டால் மயிர் உதிர்வது நிற்கும், மயிர் கருப்பாகவும் பளபளப்பாகவும், மிருதுவாகவும் ஆகிவிடும். வெந்தயத்தின் மாவை முகத்திற்கு உபயோகித்தால் பருவுகள் நீங்கும், தோல் வழவழப்பாகும்.

குதிரைகளுக்கு மசாலாவாகவும் வெந்தயம் உபயோகிக்கப்படக்கூடும். ஒரு ஆழாக்கு வெந்தயத்தை 12 மணி நேரம் தண்ணீரில் ஊரப்போட்டுக் குதிரைகளுக்குக் கொடுத்தால் மூச்சு இரைப்பு முதலிய நோய்கள் நீங்கும்.

வெந்தயக் கீரை தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். மலக்கட்டை நீக்கும். டொமாடோஸ், பசளைக்கீரை முதலியவைகளைப்போல் வெந்தயக் கீரையிலும் A. B. C. வைடமின்களும், கால்ஷியம், சோடியம், குளோரின் என்கிற தாதுக்களும் வேண்டிய அளவுகளில் இருக்கின்றன.

மாத விடாய் சரியாக ஆகாத பெண்கள் வெந்தயக் கீரையையும் வெந்தயத்தையும் அவசியம் உண்ணவேண்டும்

வெந்தயப் பயிர் உஷ்ண நாடுகளில் நன்றாய் வளரும். பல ஊர்களில் வெந்தயத்தை அதன் கீரைக்காகவே பயிர் செய்கிறார்கள். வெந்தயம் அதிக மணல் நிலங்களிலும், செவ்வல் நிலங்களிலும் நன்றாய்ப் பயிராகும். செவ்வலில் பயிராகும் வெந்தயத்தின் கீரை மிகவும் ருசியுள்ளதாயிருக்கும், அதில் கசப்பும் குறைவாக விருக்கும். வெந்தயம். ஓர் நஞ்சைப் பயிர் நிலத்தை ஆழமாக உழுது புழுதி செய்ய வேண்டும். ஏகரா ஒன்றுக்கு சுமார் 20 வண்டி சாணி, குப்பை முதலிய எருக்களைப் போட்டுக் கலக்க வேண்டும். நீர் பாய்ச்சுவதற்காக சுமார் 6 அடிச் சதுரமுள்ள பாத்திகளை நிலம் முழுவதும் செய்யவேண்டும். இவைகளில் வெந்தயத்தை விரைக்க வேண்டும். கீரை வேண்டுமானால் 2, 3 அங்குல தூரத்திற்கு ஒரு செடி வீதம் வளரும் படி விரையைத் தெளிக்க வேண்டும். விரைப்பதற்கு முன் வெந்தயத்தை சுமார் 6 மணி நேரம் கற்பூரம் கலந்த தண்ணீரில் ஊரப்போட்டு விரைத்தால் செடி சீக்கிரம் முளைக்கும், வலுவாயிருக்கும். வெந்தயம் குளிர்காலத்தில் நன்றாய் வளரும். அதிக மழைபெய்யும் பொழுதுகூட இது நீர் தேங்காத மேட்டு நிலங்களில் ஓங்கிவளரும். இதற்கு விரைத்தவுடனே ஒரு நீரும், பிறகு காலத்துக்கு தக்கபடி வாரத்திற்கு ஒரு முறை நிலத்தில் ஈரம் இருக்கும் படியும் நீர் பாய்ச்சவேண்டும். கோடைகாலத்தில் விரைத்தால் செடிகள் உலர்ந்துபோம். மழைகால ஆரம்பம் முதல் ஜனவரி மாதக் கோடிவரையிலும் கொஞ்சம் கொஞ்சமாக விரைத்து வந்தால் 7, 8 மாதங்கள் வரையிலும் கீரை கிடைக்கும். முளைகளாக விருக்கிற கீரைகள் அதிக ருசியுள்ளவை. செடி முற்றினால் கீரைக்கு சத்துபோம். விரைத்த மூன்றும் மாதத்தில் வெந்தயக் காய் முற்றி அறுவடைக்குத் தயாராகும் ஒரு ஏகராவில் 800 பவுண்டு வெந்தயம் கிடைக்கும்.

## வெந்தய லேகியம் புஷ்டியைக் கொடுக்கக் கூடிய ஓர் சிறந்த ஔழதம்.

வெந்தய லேகியத்தைச் செய்வதற்கு 8பலம் வெந்தியம், ¾வீசை அஸ்கா சங்கரை, 4பலம் நெய் வேண்டும். வெந்தயத்தைக் கல்குப்பை யில்லாமல்



சுத்தப்படுத்தி அதைக் குளிர்ந்த ஜலத்தில் ஊரப்போட்டு களையவேண்டும். பிறகு, நீரைவடித்துப் புதிய நீர் விட்டு வெந்தயத்தை இரண்டுமணிநேரம் அதில் வைக்கவேண்டும். அதன்பின்பு இன்னும் கொஞ்சம் நீரைவிட்டு வெந்தயத்தை கைக்கு மெதுவாகும்வரையில் அடுப்பின்மேல் வைத்து வேக வைக்கவேண்டும். வெந்த பிறகு பாத்திரத்தை அடுப்பைவிட்டு இறக்கி, வெந்தயம் சூடாறிக்குளிர்ந்த பிறகு அதை ஒரு கெட்டியான வஸ்திரத்தில் வைத்து முடிச்சுக்கட்டி ஒரு ஈயம் பூசின பாத்திரத்தில் கொஞ்சம் நீரைவிட்டு அவ்வெந்தய முடிச்சை அதில் அமிழ்த்திவைத்து, முடிச்சைக் கையால் பிசைந்து வெந்தயத்தின் பிசின்போன்ற சத்தை யெல்லாம் அப்பாத்திரத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும். பாத்திர நீரில் வெந்தய மொத்தை ஏற்படும். இதில் மேற்கூறிய ¾வீசை சக்கரையைக் கொட்டி கலக்கி அடுப்பின்மேல் வைத்து குறைந்ததீயில் அதைப் பாகுபோல் காய்ச்சவேண்டும். காயும்போது, பாகைக் கிளரிக்கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் சத்துகட்டி கட்டிவிடும், காந்திப்போகும். ஒரு மணிநேரம் இவ்வாறு கிளறிவந்தால் லேகியம் பதமாகிவிடும், ஒரே தளர்ந்த மொத்தையாகிவிடும். அப்பொழுது 4பலம் நெய்யைக் கொஞ்சம் கொஞ்சமாக அதில் விட்டுக் கிளர வேண்டும். நெய்ப் பாகுடன் நன்றாய்க்கலந்து கொண்டபிறகு பாத்திரத்தை அடுப்பை விட்டு எடுத்து இந்த லேகியத்தைஒரு நெய் பூசியதாம்பாளத்தில் கொட்டவேண்டும். சூடாறும் பொழுது இது பாதாம் ஹல்வா, மஸ்கத் ஹல்வா முதலியவைகளைப் போலாகும். லேகியம் சிறு கசப்பாய் இருக்கும். வெந்தயவாசனையுடனுமிருக்கும். ஆனபோதிலும், நல்ல ருசியை வஹிக்கும். இது சரீரத்தின் கணச்சூடு, உஷ்ணவாயு முதலியவைகளைப் போக்கி சரீரப்புஷ்டியையும் தாது புஷ்டியையும் நிறம்ப உண்டாக்கும். காட்லிவர் ஆயில் செய்யக்கூடியதை யெல்லாமும் செய்யும். மூளைநரம்பு முதலியவைகளைத் தேற்றிவைக்கும். வெந்தயத்தில் பெரிய விரைதினுசு தான் நல்லது.

## கிராம உபாத்தியாயர் விஷயம்.

### (3. Adult Education.)

### 3. படிப்பில்லாத பெரியோர்களுக்கு படிப்பு.

அன்பார்ந்த சகோதரர்களே,

நாம் எல்லோரும் ஈசுவர சிருஷ்டியில் வெகு அற்புதமானதும் உத்கிருஷ்ட மானதுமான மானிட சரீரத்தை அடைந்திருக்கிறோம். நமது சரீரத்தை நாம் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டே மலை, செடி, கொடி, மரம் காடு தான்யம், பக்ஷிகள் முதலியவைகளையும் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார்.

நமது சரீரத்தால் பரோபகாரம் செய்யும்பொருட்டே இம்மாதிரி சிருஷ்டித்திருக்கிறார். நமது மேலான தொழில் குழந்தைகளுக்குமட்டும் படிப்பு சொல்லிக் கொடுப்பது மாத்திரம் அல்ல. கிராம புனருத்தாரண நிமித்தமாக நாம் எத்தனையோ காரியம் செய்து வரலாம். தனம் தான்யம் இவை மூலமாக நாம் உதவி செய்யக் கூடாவிடினும், நம்மிடத்திலுள்ள கல்வியை அக்கல்வி இல்லாதவருக்கு தானம் செய்து நாமும் கிராமப் புனருத்தாரணத்தில் உழைத்து வரலாம். படிப்பில்லாத பெரியோர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பதில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முறைகளையும் சிரத்தைகளைப் பற்றியும் இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

**படிப்பு சொல்லிக் கொடுத்தல்.** முக்கியமாக படிப்பு சொல்லிக் கொடுக்க உபாத்தியாயர்கள் தேவை. இந்த பேருபகாரத்தைச் செய்ய முன் வருபவர் கிராமத்திலுள்ள பெரியோர்களுக்கு படிப்பின் நன்மையை எடுத்துச்சொல்லி, படிப்பதில் ஊக்கமுள்ளவர்களை பிரியமுடன் சேர்த்து ஒரு வகுப்பை ஆரம்பிக்க வேண்டும். வகுப்பில் சேர்ந்தவர்களுக்கு ஊக்கமாகச் சொல்லிக்கொடுக்க தவராமல் வரும் சில உபாத்தியாயர்கள் அவசியம். இவர்கள் படிக்கவரும் பெரியவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சௌகரியமான நேரத்திலேயே கல்வி கற்பிக்க வேண்டியதாக வரும். உற்சாகமுள்ள உபாத்தியாயர்களே இப்பள்ளிக்கூடத்திற்கு மூலாதார ஜீவனாகும்.

**தமிழ்.** தமிழ்பாடம் சொல்லிக் கொடுப்பது முதன்மையானது கையெழுத்துப் போட தெரியாதவர்களுக்கு முதன் முதலில் கையெழுத்துப் போட சொல்லிக் கொடுப்பது முதற்பாடம் ஆகும். சீக்கிரமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டியது நமது முக்கிய கருத்து ஆதலால் ஆரம்பம் முதற்கொண்டே சிறு வார்த்தைகளையே கற்றுக் கொடுத்தால் நலமாகும். தினசரி சம்பாஷணை செய்து, அந்தசம்பாஷணையிலிருந்தே சிலவார்த்தைகளை எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கலாம். வார்த்தைகளை எழுத்துக்களாகப் பிரிப்பதும், எழுத்துக்களை வார்த்தைகளாகச் சேர்ப்பதும் ஆரம்பத்தில் கிரமமான காரியமெனத் தோன்றுகிறது. இவைகளில் தக்க பழக்கம் அவசியமெனத் தெரிகிறது.

படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஒரு நல்ல கதைப்புத்தகத்தைச் சொல்லிக் கொடுப்பதே ஏற்றது. குழந்தைகளுடைய வாசகபாட புத்தகங்கள் பெரியோர்களுக்கு தக்கவைகள் அல்ல. சொல்லுவதெழுதல், பார்த்தெழுதல், வியாசம் எழுதல், கடிதம், கலியாணப் பத்திரிகைகள், மனுக்கள் எழுதவும் கற்றுக்கொடுத்தல் அவசியம்.

படிப்பதிலும் கையெழுத்துக் கடிதங்கள், தினசரிப் பத்திரிகைகள் மாத சஞ்சிகைகள் இவைகளையும் பள்ளிகூடத்தில் படிப்பதற்கு ஏற்ற சௌகரியங்கள் செய்யப் பட்டிருக்கவேண்டும் மனப் பாடம் செய்யக்கூடிய லேசான பாடல்கள், பழமொழிகள் இவைகளையும சொல்லிக்கொடுக்க வேண்டும்,



**புஸ்தகசாலை.** இம்மாதிரிப்பாடசாலைகளுக்கு ஒரு புஸ்தகசாலை அவசியம் தினசரி இதிலிருந்து படிக்கிறவர்கள் புஸ்தகம் எடுத்துச்செல்ல தக்க சௌகரியங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். அனேக புஸ்தகங்கள் தற்காலத்தில் வீணாகப் போகின்றன. இராப்பள்ளிக்கூட உபாத்தியாயர் ஊரில் கிடைக்கும்படியான புஸ்தகங்களையும், அயலூரில் தமது நண்பர்கள் இலவசமாகக் கொடுக்கக்கூடியவைகளையும், புஸ்தக வியாபாரிகள், ஆசிரியர்கள் கொடுக்கக் கூடியவைகளையும் சேர்த்து ஒரு புஸ்தகசாலை தயார் செய்து, புஸ்தக ஜாப்தா ஒன்றும் எழுதி இந்த புஸ்தகசாலையில் தொங்கவிட வேண்டும். ஆரம்பத்தில் புஸ்தகங்களை இனமாகவே கொடுத்துவந்து, பிறகு வருஷம் ஒன்றுக்கு இரண்டு அல்லது நாலு அணா பிரவேசக்கட்டணமாக வாங்கலாம்.

**தினசரிப் பத்திரிகை.** இப்பள்ளிக்கூடத்திற்கு ஒரு தினசரிப்பத்திரிகை அவசியமாகும். உபாத்தியாயர் முக்கிய சிலஉலக சமாசாரம் தேச சமாசாரம் இவைகளைத் தினந்தோறும் பள்ளிக்கூடம் ஆரம்பிக்குமுன் சொல்லுதல் மிகவும் உசிதம். ஊக்கமுள்ள உபாத்தியாயர்கள் அந்தந்த ஊரிலுள்ள கனவான்களுக்கு வரும் தினசரிப்பத்திரிகை வாரப்பத்திரிகை மாதாந்தர சஞ்சிகைகள் இவைகளை அவர்களிடமிருந்து கேட்டு வாங்கிவரலாம். தாங்களே கையெழுத்து சஞ்சிகை ஒன்றும் தயார் செய்யலாம். இந்த கையெழுத்து சஞ்சிகையில் கடவுள் வாழ்த்து, மாதாந்தர சமாசாரங்கள், விவசாயம், கைத்தொழில். சுகாதாரம், கால்நடைக் குறிப்புகள், தோட்டம் போடுதல், பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்கள், சிறு கதைகள் முதலியவைகளைப் பலபேரைக்கொண்டு எழுதிவரலாம். சில படங்களும் ஒட்டி வரலாம்.

**உபந்நியாசங்கள்.** வாரா வாரம் கட்டாயம் ஒரு உபந்நியாசம் நடத்துவது முக்கியம். மேலே சொன்ன விஷயங்களில் கெட்டிக்காரர்களைக்கொண்டு இந்த தொழிலாளர் பள்ளிக்கூடத்தில் உபந்நியாசம் நடத்தலாம். மற்றும் சிக்கனம், தாவரசாஸ்திரம், தொழில்முயற்சி, குழைந்தைகள் கல்வி, சகோதரதத்துவம், ஒற்றுமை, தினசரி வழங்கும் சில முக்கியமான பண்டங்கள் செய்யப்படும்விதம், சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள், இராஜாங்கமுறை, மின்சாரம், தண்ணீர்க்குழாய், ரயில்வே, கப்பல் முதலியவை போன்ற விஷயங்களைப் பற்றி படங்கள் மூலமாய், (Lantern slide cinema) லாண்டர்ன், சினிமா மூலமாயும் சொல்லுவது பிரயோஜனமாயிருக்கும். இம்மாதிரி உபந்நியாசங்களுக்கு ஊரிலுள்ள எல்லோரையுமே வரவழைக்கலாம். கடைசியில் சுண்டல் பழம் வெற்றிலைப்பாக்கு முதலியவைகளையும் வழங்கலாம்.

மற்றும் சொல்லிக் கொடுக்கக்கூடிய பாடங்கள்.

**1. கணக்கு.** வேலை செய்யும் ஒவ்வொருவனும் கையெழுத்துப்போட தெரியாவிட்டாலும் சொல்ப கணக்கு தெரிந்தவனாகவே யிருக்கிறான். சம்பளக் கணக்கு, கடைக் கணக்கு, வட்டிக் கணக்கு, பின்ன சம்பந்தமான கணக்குகள் இவைகளே முக்கியமானவைகள். ஒவ்வொருவரையும் கணக்கு நோட்டு ஒன்று வைத்துக்கொள்ளச் சொல்லி அவரவருடைய வரவு செலவுக் கணக்குகள் வைத்துக்கொள்ளச் சொல்லுவது நல்லதாகும்.

**2. இங்கிலீஷ்.** பொதுவாக ஜனங்களுக்கு இங்கிலீஷ் படிக்க வேண்டுமென்று ஒரு அவா குடிகொண்டிருக்கிறது. இந்த ஆசையை நாம் எவ்வளவு தூரம் திருப்தி செய்விக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்துவருவது நலம். சம்பாஷணை, எழுதப்படித்தல் முதலியவை இன்றியமையாத அப்பியாசங்கள் ஆகும்.

**பண உதவி** எக்காரியத்திலும் பண உதவி இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. இப்பள்ளிக்கூடத்திற்கு சில கனவான்களிடமிருந்து மாதா மாதம் ஏதாவது பொருள் உதவி வாங்கி முக்கியமான சில சிலவுகளைச் செய்து வரலாம். பள்ளியில் படிக்கும் பெரியவர்களைக் கொண்டே ஒரு நாடகம் நடித்து பணம் வசூல் செய்யலாம். நாடகம் நடிப்பதில் அனுவசியமான பரிகாசத்திற்கு இடம் இல்லாமலும் கேவலமான ஒரு விஷயத்தை நடித்துக் காட்டாமலும் இருப்பதே உத்தமம். பொதுவாக இரண்டு உதாரணங்கள் சொல்லுகிறேன். கிராமப் பள்ளிக்கூடம் என்று நடிக்கிறது நமது தொழிலையே நாமே பரிகாசம் செய்து கொள்ளுவது ஆகும். சரியான முறையில் நடத்தப்படும் பள்ளிக்கூடமாக இருந்தால் வெகு நல்லதே. கள் குடிக்கிறவன் வேடிக்கை என்றும் காட்டுவது அனுவசியமாகும். எதை நாம் பிறருக்கு "கூடாது" என்று உபதேசிக்கிறோமோ அவற்றைப்பற்றி பரிகாசமாக நாம் ஏன் பேசவேண்டும்.?

இப்பணத்தைக் கொண்டு, வெளிச்சம், விளக்கு, புஸ்தகம், புஸ்தகசாலை சமாசாரப் பத்திரிகை முதலியவைகளுக்கு செலவழிக்க வேண்டும். பொதுப் பணத்தை சிக்கனமாகவே செலவு செய்தலும், ஒழுங்காக கணக்கு வைத்தலும் முக்கியம்.

**முக்கிய குறிப்புகள்.** பள்ளிக்கூடம் வருமுன் படிக்கிறவர்கள் கைகால் அலம்பி வரவேண்டும். பாடம் ஆரம்பிக்குமுன் கடவுள் துதி சொல்லுதல் மேன்மையாகும். பிறகு உபாத்தியாயர் பத்திரிகைகளிலிருந்து சமாசாரமோ அல்லது ஒரு கதையோ சொல்லலாம். சில கதைகளும் படிக்கலாம், மழைக்



காலங்களிலும், வெயிற் காலங்களிலும், தொழில் ஊக்கமாக நடித்திவரும் காலங்களிலும் சமயத்திற்குத் தக்கவாறு பள்ளிக்கூட நேரங்களை மாற்றிவர வேண்டும். படிக்கிறவர்களுக்குத் தக்கவாறு பஜனைகள் கால க்ஷேபங்கள் முதலியவைகள் ஏற்பாடு செய்வதும் நல்லது. ஒவ்வொருவரும் சரியாகப் பள்ளிக்கூடம் வரும்படி தூண்டுதல் செய்ய சில பரிசுகள் கொடுக்கலாம். தொழில் முறையில் ஊக்கங்காட்டிவர ஒரு ஐக்கிய சங்கம் அல்லது "கோவாபரேடிவ் சொஸைடி" ஏற்பாடு செய்யலாம். இதைப்பற்றி விபரமாய் பின்னால் ஒரு சஞ்சிகையில் சில குறிப்புகள் எழுதுகிறேன். தொழிலாளர் பள்ளிக்கூடத்தை நடத்துபவர் தொழிலாளர்களின் தோழனாக இருக்க வேண்டும். அவர்கள் வீட்டுக்குச் சென்று யோகக்ஷேமங்களை விசாரித்தல், கோயில் உற்சவாதிகள் கலியாண காலங்களில் ஒருவரை ஒருவர் சந்தித்தல் இவைகள் ஒருவருக்கொருவர் உள்ள அன்பை ஓங்கச் செய்யும். அன்பினாலேதான் இக்காரியத்தைச் செய்ய முன்னே வரவேண்டும். இத்தொழிலைச் செய்வதில் கடவுள் நமக்கு தேகவலிமையும், மனோ வலிமையும் அளிக்கவேண்டும் என்றே சதா காலமும் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கும் தங்களது கிங்கிரன்.

S. ஜெகன்னாதன்

# கோயமுத்தூர் ஜில்லாவில் பன்னிமடை கிராம ஜனங்களின் பாரெஸ்டு சம்பந்தமான குறைகள்.

கோயமுத்தூர் ஜில்லா பன்னிமடை ரூரல் கிரேடிட் சொஸைடியின் பிரஸிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ பி. கே. அனந்தநாராயண ஐயர் அவர்கள் எழுதியது.

இது விஷயமாய் நாளது ஜனவரி மாதத்தில் வெளியான இப்பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாமென்று நம்புகிறேன். விவசாயிகளின் ஜீவாதாரமான ஆஸ்தி கால்நடைகளே என்பதில் எவருக்கும் ஆக்ஷேபனை இல்லை. கால் நடைகளுக்கோ என்றால் மேய்ச்சல் தரையைவிட வேறு ஆஸ்தி வேண்டியிருக்காது. இதனாலேயே மலை, காடு முதலிய பிரதேசங்களுக்கு எட்டாக்கையில் வசிக்கும் விவசாயிகள் தங்கள் கால் நடைகளின் புஷ்டியைக்கருதி பலன் கொடுக்கும் புலங்களில் ஒரு பாகத்தை மாறி, மாறி பயிரிடாமல் நிறுத்தி புல் வளர்ந்து கால்நடைகள் மேய்ந்துவர சௌகரியம் செய்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆதிகாலத்தில் மலை, காடுகளை அடுத்துள்ள கிராமவாசிகள் தங்கள் கால்நடைகளின்

புஷ்டியில் யாதொரு கவலையுமின்றி வாழ்ந்து வந்தது கேள்விப்பட்டிருக்கிறோம் பாரெஸ்டு ஆக்டு ஏற்பட்டபின் ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டதன்றி கானல்கள் விருத்தியானதாய்க் காணோம். நிற்க, இந்த கிராமத்தின் கால் நடைகளில் எவ்வளவுக்கு கானல் காடுகளில் மேய்ச்சல் தரைவசதி இருக்கிற தென்பதையும் அது விஷயமாய் கூடும் உதவியை கிராம ஜனங்களுக்கும், சொசைட்டி மெம்பர்களுக்கும் உண்டுபண்ணும் நோக்கமாய் அடியில்காணும் விஷயங்களை தெரிவிக்கும்படி இக்கிராமத்திலுள்ள கோவாபரேடிவ் சொசைடி பஞ்சாயத்தார் ஜில்லா பாரெஸ்டு ஆபீசரைக் கேட்டுக் கொண்டார்கள்.

1. பன்னிமடை கிராமத்தில் கால் நடைகளின் மொத்தம். சமீபத்தில் எடுத்த கால் நடைக் கணக்குபடி.

2. போறவாம்பட்டி ரேஞ்ஜில் இந்த கால் நடைகள் மேய வேண்டிய பிளாக்கு நெம்பர்கள்.

3. ஷை பிளாக்குகளின் ஏக்ரா விஸ்தீரணம்.

4. அவைகளுக்கு அனுமதிக்கப்பட்ட கால் நடைகளின் மொத்தம்.

5. இந்த பன்னிமடை மஜரா கஸ்தூரி நாயிக்கன்புதூர், தாளியூர், கிராமங்களிலிருந்து சென்ற 5 வருஷங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் மேய்ச்சல் பெர்மெட்டுகள் பெற்றுள்ள மொத்தம்.

6. அவைகளுள் ஒவ்வொரு வருஷமும் சாதாரண விஹிதங்களுக்கு கொடுக்கப்பட்ட பெர்மெட்டுகளும், கால் நடை மொத்தமும், அபராத விஹிதத்திற்கு வாங்கிய பெர்மெட்டுகளும் கால் நடை மொத்தமும்.

7. இந்த சொசைட்டியானது ஒரு பெர்மெட் வெண்டாராக இருக்க கோரிக்கொள்வதில் பாரஸ்டு டிபார்ட்டு மெண்டாருக்குள்ள ஆக்ஷேபம்.

ஷை கோறிக்கைக்கு பாலக்காடு ஜில்லா பாரெஸ்டு ஆபீசர் கீழே காணும் பதில் தெரிவித்தார்.

கேள்வி. 1-க்கு ரெவின்யூ டிபார்ட்டு மெண்டாரால் நடத்தப்பட்டுவரும் கால்நடைக் கணக்குகளின் விபரம் என்னிடமில்லாததால் கொடுக்கப்பட வில்லை.

கேள்வி. 2-க்கு போறவாம்பட்டி ரேஞ்ஜில் I. தடாகம் ரிஸர்வ். II. ஆனைகட்டி தென், வட ரிஸர்வ்கள், போறவாம்பட்டியில் 1 முதல் 3 செ ரிசர்வ்கள் இருக்கின்றன.

மேய்ச்சல் கட்டணம்:—

1. தடாகம் பசு 8 அணு; எருமை 1 ரூபா தலா



2. ஆனைகட்டி பசு 1 ரூபா எருமை 2 ரூபா Do

3. பொறுவாம்பட்டி 1 முதல் 3க்கு பசு 8 அணு எருமை 1 ரூபா Do

கேள்வி. 3-க்கு ஷை பிளாக்குகளின் விஸ்தீரணம்:—

| | | |
|---|---|---|
| தடாகம் மொத்தம் ஏக்கர் | 17437—61ல் | |
| கழித்தல் | 550—70 - | (closed to grazing) |
| | 16886—91 | |
| கழித்தல் | 108—00 | (Do) |
| | 16778—91 | ஏக்ரா. |
| ஆனைகட்டி தென் & வடல் | 5732—65 | |
| கழித்தல் | 83—00 | (closed to grazing) |
| | 5649—65 | ஏக்ரா. |
| பொறுவாம்பட்டி 1-முதல் 3 பிளாக்குகள் | 37164—55 | ஏக்ரா. |

குறிப்பு:—மேலேகண்ட ஏக்ரா விஸ்தீர்ணம் விருத்தியாகாத பாகத்தையும் கொண்டுள்ளதாகும்.

கேள்வி. 4-க்கு ஒரு பசுவுக்கு 5 ஏக்ரா வீதம்.

கேள்வி. 5 and 6 களுக்கு இதில் கேட்டுள்ளவைகளுக்கு பதில் இந்த ஆபீசில் தயாராய் இல்லை. பொறுவாம்பட்டி ரேஞ்சு ஆபீசர் பதில்சொல்லக் கூடியவராயிருக்கலாம். அவரைக்கேட்டு தெரிந்துங் கொள்ளலாம்.

கேள்வி. 7க்கு இந்த ஆபீசிலிருந்து 16-6-28 தேதியிட்டு L. Dis. No. 163-28 நெம்பரிட்டு அனுப்பியுள்ள கடிதத்தை ஞாபக மூட்டப்பட்டது. (இத்துடனும் ஷை கடித நகல் அனுப்பப்பட்டிருக்கிறது) ஷை கடிதத்தின் சாராம்ஸம்:—"பெர்மிட் கொடுக்கும் ஆபீசர் கிராமம் கிராமமாய் வருவார் அச்சமயம் சொசைட்டி மெம்பர்கள் அவரிடம் பெர்மிட் பெற்றுக் கொள்ளலாம் அப்படி அவர் தங்கள் கிராமத்திற்கு வராமல் போனாலும் 3 மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் வசிக்கும் அவரிடமிருந்து போய் பெற்றுக் கொண்டு வருவது அவ்வளவு தூர தேசமல்லவென்று நான் நினைக்கிறேன். ஆகையால் சொசைட்டியைப் பொருந்தமட்டில் அதற்கே நேராக பெர்மிட்டுகளை விற்கும் விஷயமாய் நான் ஏற்கனவே பிறப்பித்துள்ள உத்திரவை புனராலோசனை செய்யக்கூடவில்லை. கோவாபரேடிவ் சொசைட்டிகளின் ரிஜிஸ்திராருக்கு தெரியப்படுத்திக் கொள்வதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை"

என்ற மேற்சொன்ன பதில் வந்தது. இதன் பிறகு பஞ்சாயத்தார் போறவாம்பட்டி ரேஞ்சு ஆபீசருக்கும் ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும் எழுதி மற்றும் தகவல்கள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். 1339ம் பசலியின் பன்னிமடை கிராமத்திலுள்ள கால்நடை முதலியவைகளின் கணக்குகள் கீழே கண்டபடி என்று தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| பசுவின் வர்க்கம்—ரிஷபங்களுள், | | |
| | பலத்துக்கு உபயோகிப்பது | 10 |
| | மற்றவை | 82 |
| | எருதுகள் விரையடிக்கப்பட்டது | 456 |
| | பசுக்கள் | 351 |
| | பசுங்கன்றுகள் | 165 |
| எருமை வர்க்கம்— | எருமைகள் | 250 |
| | எருமைக் கன்றுகள் | 141 |
| | செம்மரி ஆடுகள் | 1136 |
| | வெள்ளாடுகள் | 478 |
| | பெண் குதிரைகள் | 2 |

ஆகமொத்தம் 3071 என்று தெரியவந்தது. போறவாம் பட்டி ரேஞ்ஜி ஆபீசர் தம்மால் கோறிய விபரம் தெரிவிக்க முடியவில்லை என்று எழுதியதால் மறுபடியும் D. F. O. அவர்களையே கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதற்கு டிஸ்டிரிக்டு பாரஸ்டு ஆபீசர் அவர்கள் பெர்மிட்டுகள் கிராமம் வாராக பிறப்பிக்காததால் மேல்படி புள்ளி விபரங்கள் தெரிவிக்கக் கூடவில்லை என்று தெரிவித்தார்.

இதன் பேரில் பஞ்சாயத்தார் பெர்மிட்டுகளின் நகல் பிரதியிலிருந்து (Counterfoil) தயாரிக்க முடியுமென்று நம்புவதாகவும் போதிய சிப்பந்திகளுடன் ஒரு பாரஸ்டு ஜில்லாவின் உத்யோகஸ்தரா யிருப்பவருக்கு இந்த கணக்கெடுப்பது சாத்யமாயிருக்குமாதலால் தயை செய்து விபரம் தெரிவிக்கும்படி கோறிக்கை செய்துக் கொண்டும் D. F. O. அவர்கள் மறுதளித்து விட்டார் ஆகையால் பஞ்சாயத்தார் இது விபரங்களை பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகையான "ரூரல் இந்தியா" பத்திரிகையில் இது விபரங்களை பிரசுரம் செய்து குறைகளை வெளியிட தீர்மானித்தார்கள்.

"ரிசர்வ் பாரஸ்டுகளும் வெள்ளாடு மேய்ச்சலும்"

என்ற குறிப்பு ஒன்று கூட்டுறவு சந்திரிகையில் காணப்படுவதில் 5-6-1931 தேதிய 848 நெ. கவர்ண்மெண்டு உத்திரவு ஒன்றில் ரிசர்வ் பாரஸ்டிலிருந்து வெள்ளாடு மேய்வதற்காக இடங்களை ஒதுக்கலாமென்று உத்திரவு பிறப்பித்திருப்பதாயும் இதை நிறைவேற்றுவதில் ஜில்லா கலெக்டர்களும், சீவ் கன்சர்வேட்டர்களும் ஆலோசித்து செய்வார்கள் என்றும் காணப்படுகிறது. இது விஷயமும் தெளிவுபட பத்திராதிபர் எழுதுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

P. K. A.

199407